**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP. 243/2023**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் நாள் புதன் கிழமை
எ.ம.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.எம்.மகேஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | வித்யா | த/பெ.: | சேகர் |
| கிராமம்: | மயிலாடுதுறை | தாலுக்கா: | மயிலாடுதுறை |
| மதம்: | இந்து | தொழில்: | இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து கழகம், தண்டலச்சேரி |
| வயது: | 23 | முகவரி: | மயிலாடுதுறை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 25.02.2026

**முதல் விசாரணை:–**

நான் தற்பொழுது தண்டலச்சேரியில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு இந்த நீதிமன்றத்திலிருந்து அனுப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். TN 50 R 7477 என்ற இருசக்கர வாகனம் யார் பேரில் உள்ளது என்றால் புகழேந்தி. இந்த வாகனம் எந்த வருடம் எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் 22.04.2016–ல். புதிய வாகனத்தை பதிவு செய்வதற்காக என்னென்ன ஆவணங்களை எங்கள் அலுவலகத்தில் வாங்குவோம் என்றால் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, மற்றும் டீலர் கொடுக்கும் ஆவணங்களை பரிசீலனை செய்து கொடுப்பது வழக்கம்.

வாகனத்தை பதிவு செய்ய வரும் நபர் உரிய வயதை அடைந்தவரா அல்லது இளவரா என பரிசோதனை செய்து பார்ப்போமா என்றால் வட்டார போக்குவரத்து அலுவலர் பார்ப்பார். இந்த வாகன உரிமையாளர் இளவராக இருக்கும் போது அவரது பெயரில் வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ளது சட்டப்படி தவறு என்று சொன்னால் தவறு. இந்த வழக்கின் விபத்தானது கடந்த 20.01.2017–ல் ஏற்பட்டது. அப்போது 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் எங்கள் அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற எப்பொழுது மனு கொடுத்தார் என்றால் 21.02.2018–ல். இந்த விபத்தின் பொழுது 1ம் எதிர்மனுதாரருக்கு ஒட்டுநர் உரிமம் இல்லை. விபத்து நடந்த சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் இளவர் என்பதால் அவருக்கு எங்கள் அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் கொடுக்கவில்லை.

<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

மேஜராக இருந்தததானல் தான் TN 50 R 7477 என்ற வாகனத்தின் உரிமையாளர் புகழேந்தி முறையான ஆவணங்களை கொடுத்து தான் பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். வாகனத்தை பதிவு செய்யும் போது ஆதார் அட்டை, மற்றும் பள்ளி மாற்று சான்றினை வைத்து தான் பதிவு செய்து கொடுப்போம் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வாகனத்தை பதிவு செய்யும் போது முறையான இன்சூரன்ஸ் கம்பெனியில் காப்பீடு செய்யப்பட்டு அதன் சான்று கொடுத்தால் மட்டுமே வாகனத்தை பதிவு செய்து

கொடுப்போம் என்றால் சரிதான். இந்த வாகன ஓட்டுநர் புகழேந்திக்கு ஓட்டுநர் உரிமம் உண்டு என்று சொன்னால் சரிதான். இந்த விபத்திற்கு யார் காரணம் என்றும், எங்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்துக்கு தெரியாது. காயம் பட்ட சங்கரலிங்கத்திற்கு வாகன ஓட்டுநர் உரிமம் உண்டா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 ஆன ஆர்சி புத்தக்கத்தில் யார் பெயர் உள்ளது என்றால் புகேழந்தி என்பவர் பெயர் உள்ளது. எங்கள் அலுவலகத்தில் உள்ள பதிவேடுகளிலும் மேற்படி ஆர்சி புத்தகத்தில் 1ம் எதிர்மனுதாரர் புகேழுந்தி என்பவர் பெயர் தான் உள்ளது. வாகனத்தை பதிவு செய்வதற்காக கொடுக்கப்படும் ஆவணங்களை பரிசீலனை செய்து தான் பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் 1ம் எதிர்மனுதாரர் புகேழுந்தி தான் வாகனத்தின் உரிமையாளர் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை ;– இல்லை**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.